# ஆத்தங்கரை நாவல் காட்டும் சுற்றுச்சூழல்

**கு. டாஃப்னி பபிதா**
பதிவு எண்: 23211174022015
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

**முனைவர் இரா. உமாதேவி**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி
திருநெல்வேலி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7905

**முன்னுரை**

*இவ்வுலகம் என்பது நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம் என்பவற்றால் ஆனது என்பது தொல்காப்பியரின் சீரிய சிந்தனை.*

*“நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்*
*கலந்த மயக்கம் உலகம்”*[1]

*ஒரு பொருளையோ அல்லது உயிரினத்தையோ சுற்றியுள்ள இயற்கைச் சூழலைச் சுற்றுச்சூழல் என்கிறோம். இயற்கை அமைப்பில் அனைத்து உயிரினங்களும் இயற்கையை பாதுகாப்பதில் தனது பங்களிப்பைச் சிறப்பாகச் செய்கின்றன. ஆனால் ஆறறிவு படைத்த மனிதன் மட்டும் தன் சுயலாபத்திற்காக தன்னைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலை அழிக்கத் தொடங்கிவிட்டான். ஆத்தங்கரை ஓரம் நாவலின் கதைக்களம் வழியாக சுற்றுச்சூழல் குறித்து ஆசிரியர் கூறுவதை இக்கட்டுரையின் வாயிலாகக் காணலாம்.*

**சுற்றுச்சூழல்**

சுற்றுச்சூழல் என்பது புமியில் உள்ள இயற்கை வளங்கள், உயிரனங்களை உள்ளடக்கிய மண், மலை, நீர், காடு, கடல், ஆறு, குளம் போன்றவற்றையும் அவற்றில் அமைந்த உயிரினங்களையும் கொண்டது.

“சுற்றுச்சூழல் என்பதன் பொருள் சுற்றிலும் உள்ளவை என்பதாகும். பிரஞ்சு மொழியின் “என்விரான்” Environ என்ற சொல்லிருந்தே “என்விரான்மென்ட்” Environment என்ற பெயர் வந்தது. இதன் பொருள், சுற்றிலும் சூழ்ந்து வருவது சூழ் என்பதாகும். நம்மைச் சூழ்ந்துள்ள சூரியஒளி, காற்று, நீர், மண் மற்றும் கண்களுக்குப் புலப்படாத நுண்ணுயிர்கள், தாவரங்கள், விலங்குகள், காடுகள் ஆகிய அனைத்தும் சேர்ந்ததே சுற்றுச்சூழல் ஆகும்.” எனவே நம்மைச் சூழ்ந்துள்ள அனைத்துமே சுற்றுச்சூழல் என்றே அழைக்கப்படுகிறது.

**ஆத்தங்கரை ஓரம்- கதைக்கரு**

ஓர் ஆற்றைச் சுற்றி உள்ள 50க்கும் மேலான கிராமங்களில் உள்ள பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையையும், பண்பாட்டையும் அப்பகுதியின் இயற்கை அழகையும் இந்நாவல் விவரிக்கிறது. ஆற்றின் குறுக்கே அணைக்கட்டுவதற்காக அரசாங்கம் எடுக்கும் முயற்சியால் மக்களுக்கு ஏற்படும் அவலநிலையையும் அதை தடுக்க அவர்கள் எடுக்கும் முயற்சியையும் மையமாகக் கொண்டு இக்கதை அமைந்துள்ளது.

நதியைச் சுற்றியுள்ள கிராமங்களில், நதியின் முகப்பில் உள்ளது சிந்தூர் கிராமம். அக்கிராமத்தில் உள்ள கோவிந்த பாயி. அவருடைய மகன் சிமன். சிமன் ஆற்றின் அக்கரைக்குச் சென்று படித்தவன். ஆற்றின் குறுக்கே அணை கட்டப்போவதாக அரசாங்கம் அறிவிப்பு விடுக்கிறது. பழங்குடி மக்கள் அனைவரும் இடத்தைக் காலி செய்தால் ஒரு குடும்பத்திற்கு 5000 ரூபாய் பணமும் 2.5 ஏக்கர் நிலமும் தருவதாக அறிவித்தது. இதனை சிமன் தலைமையில் பழங்குடி மக்கள் எதிர்க்கின்றனர். சிமனுக்கு உதவியாக அர்ஜீன், திலக், ம்பு, ராம்லால் என்ற அவனது நண்பர்கள் இருந்தார்கள். இவர்கள் அனைவரும் நதியைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களுக்கும் சென்று விழிப்புணர்வு செய்கிறார்கள். இந்த இடத்தை விட்டுச் சென்றால் வெளி உலகத் தொடர்பில்லாத இந்த மக்கள் பிறரிடம் ஏமாந்து அடிமை வாழ்க்கை வாழ நேரிடும் என சிமனும் அவனது நண்பர்களும் மக்களுக்கு அறிவுறுத்துகிறார்கள்.

இவர்களுக்கு ஆதரவாக ராதா படங்கர் என்ற பெண்ணும் அவர்களது இரு நண்பர்களான சந்தீப் மற்றும் நிதின் வருகிறார்கள். இவர்கள் அம்மக்களோடு இருந்து அவர்களது போரட்டங்களுக்கு முன் நிற்கிறார்கள். பல தொண்டு நிறுவனங்களுக்கு சென்று ஆதரவு கேட்கின்றனர். தாலுகா அலுவலகம் முன்பு அமைதியான முறையில் போராட்டம் நடந்துகின்றனர்.

இந்நிலையில் பழங்குடி மக்களை புதிய இடத்திற்கு அப்புறப்படுத்த சுதீர் என்ற நேர்மையான அதிகாரியை அரசாங்கம் நியமிக்கிறது. அவர் பழங்குடி மக்களின் இடங்களை ஆய்வு செய்யும் போது அணைக் கட்டுவதால் ஏற்படும் பாதிப்பை அரசாங்கத்திற்கு தெரிவிக்கிறார். அதிக வசதியோடு இருக்கும் பண்ணையார்களின் வளர்ச்சிக்காக அணை கட்டுப்படுவதையும், அணை கட்டுவதனால் இயற்கை வனம் அழிக்கப்படுவதையும், அரசியல்வாதிகள் தங்கள் பணவரவுகளுக்கு அணைக்கட்டுவதையும் அறிந்து கொண்டு பழங்குடி மக்களுக்கு தன்னால் இயன்ற உதவியை செய்கிறார். இதனால் சுதீர் பணி இடமாற்றம் செய்யப்படுகிறார். சிமனும், ராதா படங்கரும் அணைக்கட்டுவதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தோல்வியையே தழுவுகின்றனர். இதனால் அணைக்கட்டுவதற்குரிய இடத்தில் போராட்டம் நடத்தி இருவரும் கைது செய்யபடுகின்றனர்.

அணைக்கு பெரிய மதிச்சுவரு கட்டப்பட்டு விட்டது. அது மழைக்காலம் ஆனதால் நான்கு நாட்கள் தொடர்ந்து பெய்த மழையால் கிராமத்திற்கு வெள்ளம் வந்தது. கிராம மக்கள் அனைவரையும் காப்பாற்றி விட்டு கோவிந்த பாயி நதியொடு சென்று விட்டார். இதனை சிறையில் ராதா அறிந்து கொள்கிறார். ஆனால் இதுவே கடைசி அணையாக இருக்கும் என தன் பயணத்தை தொடர்கிறார். இவ்வாறு ஆசிரியர் நாவலை நிறைவு செய்கிறார்.

சுற்றுச்சூழல் பாதிக்கப்படக்கூடாது, நம்முடைய பாரம்பரியமான பண்பாட்டையும் இழக்கக்கூடாது என்ற யதார்த்தத்தோடு ஆசிரியர் கதைக்கருவை அமைத்துள்ளார்.

**நிலவளம்**

நதியைச் சுற்றி 50க்கும் மேற்பட்ட கிராமப்பகுதி உள்ள இடங்களில் முகப்பில் உள்ள கிராமம் சிந்தூர் ஆகும். “அழகுடன்

பசுமையைப் போர்த்திக் கொண்டு அங்கங்கே சின்னச்சின்ன குன்றுகளாய் பிரிந்திருக்கும் அந்த பிரதேசம்" என சிந்தூர் நிலப்பகுதியை ஆசிரியர் கூறுகிறார். "நதியின் அலைகள் அடர்த்தியான நெடுமரங்கள் வழிந்தோடும், வாய்க்கால்கள், ஆரோக்கியத்தைத் தேக்கி தன்னை உருமாற்றி உண்ண கொடுக்கும் கரிசல் மண், இங்கு விளையாடிய நினைவுகள்" என்று கோவிந்த பாயின் நினைவுகளாக ஆசிரியர் எடுத்து ரைக்கின்றார்.

அவ்வாறு உள்ள நிலப்பகுதியை மனிதன் வளர்ச்சி என்ற பெயரில் காவு கொடுத்து வருகின்றான். அணை கட்டுவதற்காக அங்குள்ள இயற்கை வனம் அழிக்கப்படுகிறது. "இழக்கறதுக்கு இணையாக எந்தக் காட்டையும் உருவாக்க முடியாது. வனங்கறது என்ன வெறும் மரம், செடி, கொடி மட்டும் தானா, அதுல இருக்கிற உயிரினங்களும்தான். பறவை, விலங்கு, பூச்சி, பூஞ்சான் எல்லாமே வனம் தான். அதையெல்லாம் செயற்கையா நம்மால் உருவாக்க முடியுமா? இயற்கை தேர்ந்தெடுத்து உருவாக்கிற வனத்தை ஒப்பிட முடியுமா. வழுக்கைத் தலையில் முடியை ஒட்டவச்ச மாதிரிதான் இந்த செயற்கை வனம்" என வனங்கள் அழிக்கப்படுவதை ஆசிரியர் விளக்குகிறார்.

காந்திஜியின் பொன் மொழிகளில் ஒன்றான "இந்த உலகம் அனைவருடைய தேவைகளையும் நிறைவேற்றி கொள்வதற்கான வளங்களைப் பெற்றுள்ளது. ஆனால் தனியொருவனுடைய பேராசையை நிறைவேற்றிக் கொள்வதற்கு போதாது"[2] என்று மனிதனின் பேராசையின் காரணமாக இயற்கை அழிக்கப்படுகின்றது என்று காட்டப்படுகிறது.

## நீர்வளம்

நதி ஓடும் அழகை யதார்த்தத்தோடு கோவிந்தபாயின் நினைவுகள் மூலம் ஆசிரியர் கூறுகிறார். "அழகாய் சுழித்து பூமியை வருடுவது போல் வழிந்தோடும் அதன் ஒயிலான நடை அன்று அவருக்கு ரசிக்கும் படியாக இருந்தது இல்லை. தான் பிறந்தது முதல் தனக்கு நெருக்கமானதாய் எல்லாமுமாய் நிறைந்து வயிற்றைக் குளிர்வித்து நனைத்து ஓடிக்கொண்டிருந்த அந்த நதி" என நதியின் அழகை கூறுகிறார்.

"அனைவரும் சாப்பிட்டு முடித்த பிறகு அத்தனை தட்டுகளையும் ஆற்றுநீரில் சுத்தமாய்க் கழுவும் பொழுது மிச்சமிருந்த பருப்பும், ரொட்டியும் வேகமாய்த் தண்ணீரில் அடித்துச் செல்லப்படுவதைக் கண்டு புரித்தான். தெளிந்த அந்த நீரோட்டத்தில் கலந்த முதல் அசுத்தமும் மாசும் அதுதான் என்பது அப்போது அவனுக்கும் தெரியாது". உண்ணும் உணவு தண்ணீரில் கலப்பதையே மாசு கலக்கிறது என்று ஆசிரியர் கூறுவதன் மூலம் நதியின் தூய்மையை அறிய முடிகிறது.

சங்க காலத்தில் போர் காரணமாக எதிரி நாட்டு மன்னனின் நீர் நிலைகளை யானைக் கொண்டு பாழ்படுத்துவதை போர் நடைமுறைகளில் ஒன்றாக கருதப்பட்டு உள்ளது. இதனை,

"ஒளிறு மருப்பின் களிறு அவர காப்புடைய கயம் படியினை"[3] என்றும், "கடிதுறை நீர்க் களிறு"[4] என்றும், புறநானூற்று பாடல்கள் வழி அறியலாம். ஆனால் நாம் இப்போது நம்முடைய வாழ்க்கையின் ஆதாரமான நதியை நாமே மாசுபடுத்தி அழித்து கொண்டிருக்கிறோம்.

## காற்றின் தன்மை

அணை கட்டுவதற்காக எடுக்கப்படும் முயற்சியில் இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் ஹெக்டேர் வனப்பகுதி அழியப்போகிறது. இதன் விளைவாக ஏற்படும் காற்று மாசுபடுதலினால் உண்டாகும் பாதிப்புகள் அதிகம். "ஏற்கனவே இந்தியாவில் இருக்கிற வனம் கொறச்சல். கார்'பன்டை ஆக்ஸைடு வாயு மண்டலத்துல அதிகரிச்சா Green House effect நடக்கும். பல கிராமங்கள் தண்ணீரில் முழ்க வேண்டியதாயிருக்கும்." "இவை

எல்லாம் உடனடியாக நடக்காவிட்டாலும் நம்ம சந்ததியினருக்கு நடக்கும். நம்ம முன்னோர்கள் நமக்கு செஞ்ச மாதிரி நம்ப சந்ததியினருக்கு ஏதாவது செய்ய வேணாமா? குறைந்த பட்சம் அவங்க நம்பகிட்ட ஒப்படைச்சபூமியை அப்படியே சீர் குலையாம வருங்கால சந்ததியோட கையில் ஒப்படைக்கறது நம்ம கடமைதான்" என ஆசிரியர் பதிவு செய்கிறார். "சிந்தூரில் அணையைக் கட்டுவதினால் ஏற்படும் பாதிப்பினால் சுற்றுப்புறுச் சூழல் பாதிப்புன்னு பார்த்தா அது எனக்குத் தேசத் துரோகமாகவும் படுது" எனக் கூறுகிறார்.

**"கார்க் கரும்பின் கமழ் ஆலைத்**
**தீத் தெறுவின் கவின்**
**வாடி, நீர்ச் செறுவின் நீள் நெய்தல்**
**கோள் தெங்கின், குலை வாழைக்,**
**காய்க் கமுகின், கமழ் மஞ்சள்,**
**இன மாவின், இணர்ப் பெண்ணை,**
**முதற்சேம்பின், முளை இஞ்சி"[5]**

இப்பாடலில், தென்னை, வாழை, பாக்கு மற்றும் பனைமரங்கள் மருத நிலத்தில் காணப்பட்டிருக்கும். இவை புகைகளையும், தூசுகளையும் தடுப்பவனவையாக இருந்துள்ளது. காற்று மாசுபாட்டினை மரங்கள் மூலம் தடுத்தனர். தற்போது மரங்களை அழித்து காற்று மாசுபாட்டை நாம் அதிகரிக்கிறோம் என்பதை நாவலில் ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

## முடிவுரை

மனித வாழ்க்கை என்பது இயற்கையை மையமாகக் கொண்டது. இயற்கையோடு இணைந்த வாழ்க்கை என்று மாறியதோ, அன்றே சுற்றுச்சூழல் மாசுபடுதல் துவங்கிவிட்டது. மனிதன் இன்றி இயற்கையால் இருக்க முடியும். ஆனால் இயற்கையின்றி மனிதனால் உயிர் வாழ இயலாது. "ஆந்தைகளோடு எண்ணிக்கை குறைஞ்சதனால தான் எலிகளோடு எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடியல. இயற்கையை அழிச்சா யாராலேயும் சமத்தன்மையைச் சரி செய்யமுடியாது." ஆனால் இதை உணராத மனிதன் வளர்ச்சி, நாகரிகம் என்ற பெயரில் இயற்கையை அழித்து சுற்றுப்புறத்திறகு தீங்கு விளைவிக்கிறான்.

**"மண்டிணிந்த நிலனும்,**
**நிலனேந்திய விசும்பும்,**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலைஇய தீயும்,**
**தீ முரணிய நீறுமென்றாங்கு"[6]**

ஐம்புதத்திற்கும் கேடு வந்தால் அதை சரி செய்யும் நாடே தலையான நாடு என்று புறநானூறு கூறுகிறது. ஆத்தங்கரை ஓரம் நாவலில் சிந்தூர் பகுதியில் அணை கட்டுவதால் நிலம், நீர், காற்று ஆகியவற்றில் ஏற்படும் பாதிப்பினை ஆசிரியர் கூறுகிறார். இந்நாவல் ஒரு உண்மை நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. தற்போதுள்ள சூழலில் மனிதன் சுயநலத்திற்காக இயற்கையை அழித்து எதிர்காலத்தை இருண்ட காலமாக்கிக் கொண்டு இருக்கிறான் என்பதை ஆசிரியர் பதிவிடுகிறார். இங்ஙனம் இறையன்புவின் ஆத்தங்கரை ஓரம் நாவலில் கூறப்பட்டுள்ள சுற்றுச் சூழலைப் பற்றி இவ்வாய்வு கட்டுரை உரைத்து நிற்கின்றது.

## துணைநின்ற நூல்கள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா எண்: 635
2. சின்னதம்பி முருகேசன்.பொன், சுற்றுச்சூழலியல் உலகம் தழுவிய வரலாறு, பக்கம்:67
3. புறநானூறு, பாடல் எண்:15
4. புறநானூறு, பாடல் எண்:76
5. பட்டினப்பாலை, பாடல் அடி: 9-19
6. புறநானூறு, பாடல் எண்: 2